# கலைஞரின் வரலாற்றுடன் கழக வரலாறும் இந்நூலில் இருக்கிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

அதாவது, என்னுடைய பாட்டி அஞ்சுகம் அம்மாள் அவரைப் பற்றி, தலைவர் கலைஞர் மிக மிக உருக்கமாக எழுதுவார்... இன்னும் சொல்லவேண்டும் என்றால், அதைவிட உருக்கமாக எழுதியவர்கள் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களும், நடிகர் திலகம் சிவாஜி அவர்களும்!

அஞ்சுகம் அம்மையார் தங்களுக்கு எப்படியெல்லாம் உணவூட்டி, அன்பு காட்டி வளர்த்தார் என்று பேசியிருக்கிறார்கள். தன்னுடைய தாயை பெரிதும் போற்றி; தானும் தாயுள்ளத்துடன் செயல்பட்டவர் தலைவர் கலைஞர்!

**'கலைஞர் எனும் தாய்' என்ற தலைப்பு மிகவும் பொருத்தமானது!**

அப்படிப்பட்ட தலைவருக்குக் "கலைஞர் எனும் தாய்" என்ற நூல் தலைப்பு மிக மிகப் பொருத்தமாக அமைந்திருக்கிறது! எல்லோரும் சொன்னார்கள். தலைவர் கலைஞர் எ.வ.வேலு அவர்களைப் பாராட்டும்போது, எ.வ.வேலு என்றால் "எதிலும் வல்லவர்" என்று பாராட்டுவார். தலைவர் கலைஞர் அவர்களிடம் அப்படி பெயர் வாங்குவது சாதாரண விஷயமில்லை! அவருடன் பழகிய அத்தனை பேருக்கும் நன்றாக தெரியும்! அதிலும் சீனியர் துரைமுருகன் அவர்களுக்கு நன்றாக தெரியும்.

2011-ஆம் ஆண்டு வேலுவின் மகன் கம்பன் திருமணத்தை நடத்தி வைத்து முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் பேசிய போது, குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

**எ.வ.வேலுவை வெகுவாக பாராட்டியவர் கலைஞர்!**

அப்போது உணவுத்துறை அமைச்சராக இருந்த எ.வ.வேலு அவர்கள், ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தியதைக் குறிப்பிட்டதுடன், ரேஷன் கடைகள் செயல்பாட்டைப் பாராட்டி, "தமிழ்நாட்டை மற்ற மாநிலங்களும் பின்பற்றவேண்டும்" என்று உச்சநீதிமன்றம் பாராட்டியதைச் சொல்லி, "வேலுவைப் போன்ற ஆற்றல் பெற்றவர்களாக அனைத்து அமைச்சர்களும் வரவேண்டும்' என்று பாராட்டினார் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

அதேபோல, தலைவர் கலைஞர் சொன்ன இன்னொரு முக்கியமான பாராட்டும் இருக்கிறது... "நான் மனதில் என்ன நினைக்கிறேனோ அதை என் வாயால் சொல்லாமலேயே, என் கண் அசைவின் மூலமாகவே அதை உணர்ந்து செய்து முடிக்கின்ற ஆற்றல் உள்ளவர்களில் தம்பி வேலு அவர்கள்தான் முதலிடத்தில் இருக்கிறார்" என்று பாராட்டினார்.

இன்று எனக்கும் அதேபோலதான் வேலு இருக்கிறார். ஆறாவது முறை கழக ஆட்சி அமைந்ததும் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் பொறுப்பை நான் வேலு அவர்களிடத்தில் ஒப்படைத்தேன்.

● சென்னை, கிண்டியில் கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை

● மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம்

● கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்

● திருவாரூரில் கலைஞர் கோட்டம் - ஆகியவை வேலுவின் திறமைக்குச் சாட்சியங்களாக இன்றைக்கும் விளங்கிக் கொண்டிருக்கிறது!

ஏன் அண்ணா அறிவாலயத்திலும், முரசொலி அலுவலகத்திலும் அமைக்கப்பட்ட கலைஞர் சிலைகளை அமைத்தவரும் அவர்தான். இவை எல்லாவற்றுக்கும் தலையாய சாதனைதான் கடற்கரையில் அமைந்திருக்கின்ற கலைஞர் உலகம் அதைத்தான் நம்முடைய சூப்பர் ஸ்டார் குறிப்பிட்டார்.

அதைப் பார்க்கிறவர்கள் எல்லோரும் வியந்து போகும் அளவுக்கு அதை அமைத்துத் தந்தவர் நம்முடைய வேலு அவர்கள். அவர் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் மட்டுமில்லை, கழகத்தைப் பொறுத்தவரைக்கும் சொல்லவேண்டும் என்றால், சிலைகள் துறை -மணிமண்டபங்கள் துறை - விழாக்கள் ஒருங்கிணைப்புத் துறை - சிறப்பு மலர்கள் தயாரிப்புத் துறை - புத்தகங்கள் அச்சிடும் துறை - நினைவுப் பரிசுகள் வழங்கும் துறை என்று எத்தனையோ துறைகள் வேலு அவர்களிடம்தான் இப்போது இருக்கிறது!

அதுமட்டுமல்ல, அவர் திரைப்படம் எடுத்திருக்கார் - கூத்து கட்டுவார் - சினிமாவிலும், நாடகத்திலும் நடித்திருக்கிறார். எத்தனை வேலைகள் கொடுத்தாலும், அவை அத்தனையும் சிறப்பாகச் செய்து காட்டும் வல்லமை வேலுவுக்கு உண்டு.

> *கலைஞரின் வரலாற்றுடன் கழக வரலாறும் இதில் இருப்பதைத்தான் இந்த நூலின் மிக மிகச் சிறப்பானதாக நான் கருதுகிறேன். "சோதனை எனும் நெருப்பில் புடம் போட்ட சொக்கத் தங்கமாக விளங்கும் வரலாற்றுக்கு உரிமை படைத்த ஒரு பேரியக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்" என்று எழுதி இருப்பதைப் படிக்கும்போது இந்த இயக்கத்தின் தலைவன் என்ற முறையில் நான் பெருமைப்படுகிறேன்!*

**எழுத்திலும் வல்லவர் என்பதை காட்டியிருக்கிறார் எ.வ.வேலு!**

எல்லோரும் சொன்னதுபோல, எதிலும் வல்லவரான வேலு அவர்கள், எழுத்திலும் வல்லவர் என்று இந்தப் புத்தகத்தின் மூலமாக. இன்றைக்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறார்.

தமிழ் இலக்கியத்தில் ஆர்வம் கொண்ட வேலு அவர்கள், திருக்குறளையும், கலைஞரையும் இணைத்தும் பிணைத்தும் இந்த நூலை எழுதி இருக்கிறார். திருக்குறள் பாதையில் கலைஞர் எப்படி நடந்து காட்டுவார் என்று பொருத்தமான குறள்களில் தேர்ந்தெடுத்து, இணைத்து எழுதி இருக்கிறார். இந்தப் புத்தகத்தில் இருக்கின்ற ஒவ்வொரு கட்டுரைகளின் தலைப்புகளுமே, தனியாக ஒரு புக் டைட்டில் மாதிரி இருக்கிறது!

● குவளையில் பூத்த குறிஞ்சி மலர்!

● கருணையும் நிதியும் கலைஞர் ஆன கதை!

● ஐந்தாம் தமிழ்ச் சங்கம் அண்ணன் கலைஞர்

● காலத்தை வென்ற காவியத் திருமகன்!

* தமிழின் தலைவாயில்! தமிழரின் கலைக்கோவில்! - இப்படி அழகான தலைப்புகளை எழுதியிருக்கிறார்.

**கலைஞர் எழுதினால் தமிழ்கொட்டும்! கலைஞரைப் பற்றி எழுதினாலும் தமிழ் கொட்டும்!**

கலைஞர் எழுதினால், தமிழ் கொட்டும் என்பது எவ்வளவு உண்மையோ - அதுபோல கலைஞரைப் பற்றி எழுதினாலும் தமிழ் கொட்டும் என்பதற்கு "கலைஞர் எனும் தாய்" நூலும் ஒரு எடுத்துக்காட்டு.

மிசா காட்சிகளை விவரிக்கும்போது நானும் இந்தப் புத்தகத்தில் வருகிறேன். நான் தாக்கப்பட்ட காட்சிகளையும் இந்தப் புத்தகம் சொல்லுகிறது. அந்தக் காலக்கட்டத்தில் தலைவர் கலைஞர் எப்படி செயல்பட்டார் என்று வேலுவின் சொற்களில் படிக்கும்போது நான் உணர்ச்சிவசப்பட்டேன்...

எனக்கு ஒரு நிகழ்வு நினைவுக்கு வருகிறது. மிசாவில் கைது செய்யப்பட்ட கழக உடன்பிறப்புகளை, குடும்பங்கள் பார்க்க அனுமதிக்கவேண்டும் என்று தலைவர் கலைஞர் சிறைத்துறையிடம் சென்று வாதாடுகிறார். ஆனால், என்னை மட்டும், உங்கள் மகனை மட்டும் நீங்கள் சந்திக்க அனுமதி தருகிறோம் என்று சொன்னார்கள். ஆனால், அந்தச் சமயத்திலும் மற்ற கழகத் தோழர்கள் குடும்பங்களைச் சந்தித்த அனுமதித்த பிறகுதான் என்னுடைய மகனை நான் சந்திப்பேன் என்று தலைவர் கலைஞர் சொன்னார். கடைசியாகதான் என்னை வந்து சந்தித்தார்.

**உடன் பிறப்புகளை தன் உயிரினும் மேலாக மதித்தவர் கலைஞர்!**

அப்படிப்பட்ட தலைவர் கலைஞர் அவர்களை நினைத்தாலே நம்முடைய உள்ளத்தில் ஒலிக்கின்ற குரல்..."என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே..." அது ஏதோ வார்த்தை அலங்காரம் இல்லை! உயிரினும் மேலானவர்களாக உடன்பிறப்புகளை மதித்தார் கலைஞர். இந்தப் புத்தகத்தில் நான் மட்டுமில்லை, தம்பி உதயநிதியும் இருக்கிறார்.

1977-ஆம் ஆண்டு சென்னை மத்திய சிறையில் இருந்து தலைவர் கலைஞர் எனக்கு எழுதிய கடிதத்தில், "1953-ஆம் ஆண்டு நான் திருச்சி சிறையில் இருந்த போது நீ கைக்குழந்தை. உன் அம்மா தூக்கிக் கொண்டு வந்து சிறையில் காண்பித்தார்கள். இப்போதும் நான் சிறையில் இருக்கிறேன், உனக்கு ஒரு மகன் பிறந்திருக்கிறான். அந்தப் பேரனும் என்னைப் பார்க்க சிறைக்கு வருவான்" இந்த அனுபவங்கள் எல்லாம் எவ்வளவு இனிமையானவை பார்த்தாயா! இந்தக் குடும்பத்தில் மட்டுமல்ல, நமது இயக்கமாம் இந்தப் பெரிய குடும்பத்தில் எத்தனையோ உடன்பிறப்புகளுக்கு இப்படிப்பட்ட சிறை அனுபவங்கள்.." வாய்க்கும் என்று எனக்கு எழுதினார். இதுபோல, பல செய்திகள் இந்தப் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது!

கலைஞரின் வரலாற்றுடன் கழக வரலாறும் இதில் இருப்பதைத்தான் இந்த நூலின் மிக மிகச் சிறப்பானதாக நான் கருதுகிறேன். "சோதனை எனும் நெருப்பில் புடம் போட்ட சொக்கத் தங்கமாக விளங்கும் வரலாற்றுக்கு உரிமை படைத்த ஒரு பேரியக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்" என்று எழுதி இருப்பதைப் படிக்கும்போது இந்த இயக்கத்தின் தலைவன் என்ற முறையில் நான் பெருமைப்படுகிறேன்!

**கலைஞரின் உடன்பிறப்புகள் என்பதைவிட நமக்கு வேறு என்ன பெருமை இருக்கிறது!**

இந்திய வரைபடத்தில் பெரிய எழுத்தில் குறிப்பிடப்படாத திருக்குவளை என்ற சிற்றூரில் பிறந்த கலைஞருக்கு இன்று இந்திய அரசே நாணயம் வெளியிடுகிறது என்றால், 'அத்தகைய புகழ்மிக்க தலைவரின் உடன்பிறப்புகள்தான் நாம்' என்பதைவிட, நமக்கு என்ன பெருமை வேண்டும்! அவருடைய புகழையும், பெருமையையும் அடுத்து வரும் தலைமுறைக்கு எடுத்துச் சொல்வதோடு, இனம், மொழி, மாநிலம் காக்க எந்நாளும் உழைப்பதுதான் தலைவர் கலைஞருக்கு நாம் காட்டக்கூடிய உண்மையான நன்றி!

**சூப்பர் ஸ்டாருக்கு நான் வழங்கும் உறுதிமொழி!**

என்றும் இறவாத தாய்க் கலைஞர் வாழ்க! வாழ்க! என வாழ்த்தி, எ.வ. வேலு அவர்களையும் மனதாரப் பாராட்டி, இந்த நிகழ்ச்சிக்கு முத்தாய்ப்பு வைத்தது போல நம்முடைய சூப்பர் ஸ்டார் வருகை தந்து மனந்திறந்து என்னை ஊக்கப்படுத்தக்கூடிய வகையில், என்னைவிட ஒரு வயது கூடதான், அதனால் அறிவுரையும் சொன்னார். அவர் சொன்ன அத்தனையையும் நான் புரிந்துகொண்டேன். பயப்படவேண்டாம். எதிலும் நான் தவறிவிடமாட்டேன். எல்லாவற்றிலும் உஷாராக இருப்பேன் என்ற அந்த உறுதியை அவருக்கும் தெரிவித்து, அவருக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, இந்த நிகழ்ச்சியைச் சிறப்பாக அமைத்து நம்மையெல்லாம் பெருமைப்படுத்தியிருக்கக்கூடிய எ.வ.வேலு அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றி, நன்றி, நன்றி

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

## எதையும் சிறப்பாகச் செய்யும் வல்லமை மிக்கவர் எ.வ.வேலு!



**● சென்னை, கிண்டியில் கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை**

**● மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம்**

**● கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்**

**● திருவாரூரில் கலைஞர் கோட்டம் – ஆகியவை வேலுவின் திறமைக்குச் சாட்சியங்களாக இன்றைக்கும் விளங்கிக் கொண்டிருக்கிறது!**

**ஏன் அண்ணா அறிவாலயத்திலும், முரசொலி அலுவலகத்திலும் அமைக்கப்பட்ட கலைஞர் சிலைகளை அமைத்தவரும் அவர்தான். இவை எல்லாவற்றுக்கும் தலையாய சாதனைதான் கடற்கரையில் அமைந்திருக்கின்ற கலைஞர் உலகம் அதைத்தான் நம்முடைய சூப்பர் ஸ்டார் குறிப்பிட்டார்.**

**அதைப் பார்க்கிறவர்கள் எல்லோரும் வியந்து போகும் அளவுக்கு அதை அமைத்துத் தந்தவர் நம்முடைய வேலு அவர்கள். அவர் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் மட்டுமில்லை, கழகத்தைப் பொறுத்தவரைக்கும் சொல்லவேண்டும் என்றால், சிலைகள் துறை – மணிமண்டபங்கள் துறை – விழாக்கள் ஒருங்கிணைப்புத் துறை – சிறப்பு மலர்கள் தயாரிப்புத் துறை – புத்தகங்கள் அச்சிடும் துறை – நினைவுப் பரிசுகள் வழங்கும் துறை என்று எத்தனையோ துறைகள் வேலு அவர்களிடம்தான் இப்போது இருக்கிறது!**

**அதுமட்டுமல்ல, அவர் திரைப்படம் எடுத்திருக்கார் – கூத்து கட்டுவார் – சினிமாவிலும், நாடகத்திலும் நடித்திருக்கிறார். எத்தனை வேலைகள் கொடுத்தாலும், அவை அத்தனையும் சிறப்பாகச் செய்து காட்டும் வல்லமை வேலுவுக்கு உண்டு.**

## சேலம் கிழக்கு மாவட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிக்கை!



சேலம், ஆக. 26-

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டம் 28.08.2024 புதன்கிழமை காலை 10.00 மணி அளவில் வாழப்பாடியில் உள்ள சேலம் கிழக்கு மாவட்ட அலுவலகம் மு.க.ஸ்டாலின் அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் கழக முதன்மை செயலாளர், நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே.என். நேரு தலைமையில் நடைபெற உள்ளது.

எனவே சேலம் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர், ஊராட்சி கிளை கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுகுழு உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிகள், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தேர்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மற்றும் கழகத்தின் துணை அமைப்புகளான அணிகளின் மாநில துணை அமைப்பாளர்கள், மாவட்ட தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. கழக முப்பெரும் விழா

2. 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து.

3. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் பங்கேற்பு! விழுப்புரம் வடக்கு மாவட்டம் –

## மயிலம் தொகுதி கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் ப.சேகர் அறிக்கை!



விழுப்புரம். ஆக. 26-

விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ப.சேகர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் தொகுதி செயல்வீரர்கள் கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்

27.08.2024 - காலை 11 மணி - திரு.மணிமாறன் - மயிலம் (வடக்கு)- ரெட்டணை S.R திருமண மண்டபம்

09.09.2024 - காலை 10.00 மணி - துரை - வல்லம் (தெற்கு) - நாட்டார் மங்கலம் K.S.M திருமண மண்டபம்

09.09.2024 - மாலை 4.00 மணி - இளம்வழுதி - வல்லம் (மத்தியம்) - நாட்டார்மங்கலம் K.S.M திருமண மண்டபம்

10.09.2024 - காலை 10.00 மணி -அண்ணாதுரை - வல்லம் (வடக்கு) - நாட்டார் மங்கலம் K.S.M திருமண மண்டபம்

11.09.2024 - காலை 10.00 மணி - செழியன் - மயிலம் (மத்தியம்) - மயிலம் சீத்தாலட்சுமி பேலஸ்

11.09.2024 - மாலை 4.00 - சேதுநாதன் - மயிலம் தெற்கு - கூட்டேரிப்பட்டு ஸ்ரீநிவாசா திருமண மண்டபம்

மேற்கண்ட அனைத்து செயல்வீரர்கள் கூட்டங்களில் சிறு பான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார். கூட்டத்தில் மாநில, மாவட்ட, ஒன்றிய, கிளைகழக நிர்வாகி கள் அனைத்து அணி நிர்வாகிகள், உள்ளாட்சிமன்ற பிரதிநிதி கள், அனைவரும் தவறாமல் கலந்துக் கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டப் பொறுப்பாளர் ப.சேகர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருவெண்ணெய்நல்லூர், பல்லரிப்பாளையம் மாவட்ட பிரதிநிதி சடகோபன் இல்ல புதுமனை புகு விழாவில் உயர்க்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துக்களை தெரிவித்தார் .விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன், ஒன்றியச் செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், ஒன்றிய குழுத் தலைவர் ஓம் சிவ சக்திவேல் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.